SOND

SOND Better World Movement

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை ஆவணி, 2013

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

18/3A Anai Road
Kaneshapuram
0772242401

### இதழின் உள்ளே

1. யாழ்
2. அம்பாறை
3. மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வு

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத இடங்களில் மக்கள் தங்களின் தேவைகருதி விறகு வெட்டும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை மிதிவெடி மற்றும் வெடிபொருட்களின் தாக்கம் அதன் பாதிப்புக்கள் பற்றி விழிப்புணர்வு மிதிவெடி திட்டப் பணியாளர்களால் வழங்கப்பட்டது




தெல்லிப்பளைப்பிரதேசத்தில் சிறுவர்குழுக்களை சந்தித்து அவர்களுக்கான மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருள் பற்றிய அபாயத்தினை விளக்கிய போது அவர்களின் கவனயீர்ப்பினை காணக்கூடியதாக உள்ளது





## பயிற்சி

மிதிவெடி அபாயக்கல்வி செயற்பாட்டின் மூலம் கிராமமட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்களுக்கான பயிற்சி 29.08.2013 அன்று சொண்ட் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது இதில் 30 தொண்டர்கள் பங்கு பற்றினர் அவர்களின் குழுச்செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்களின் ஆர்வத்தினையும் ஊக்கத்தினையும் வெளிப்படுத்துகின்றது . அத்துடன் அதில் கலந்து கொண்ட மிதிவெடி தொண்டர்களுக்கான சான்றிதழ் வைபவமும் வழங்கப்பட்டது






## மிதிவெடி அடையாளப்படுத்துதல்

தொண்டமனாறு சந்நிதி கோவில் கிராமத்தில் மக்கள் பாவணைக்காக விடப்பட்ட காணியின் ஒரு பகுதியில் வெடிக்காத வெடிபொருள் அடையாளப்படுத்தப்பட்டு இருப்பததை படத்தில் காணலாம்.






## விவசாயிகளுடனான கலந்துரையாடல்

13.08.2013 அன்று **Organic Certificate** எடுப்பதற்கான விவசாயிகளை தெரிவு செய்வதற்கும் இதன் நடைமுறைகளை விளங்கப்படுத்தும் கூட்டம் தெரிவு செய்யப்பட்ட 3 கிராமசேவையாளர் பிரிவுகளில் நடைபெற்றது இதில் 27 விவசாயிகள் கலந்து கொண்டனர்.






SOND

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .**

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் கண்ணகிபுரம் கிராமத்தில் செயற்பட்டுவரும் கண்ணகி மேட்டுநிலப் பயிர்ச்செய்கையாளர் சங்கத்தினூடாக SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேதன விவசாயப் பண்ணை அமைத்தல் திட்டத்தின் கீழ் சங்கத்தின் உறுப்பினர்களின் மூலம் சேதனப் பசளை தயாரிக்கப்பட்டுள்ளது

## பாலர் பாடசாலை

சொண்ட் அமைப்பின் கீழ் அம்பாரை மாவட்டத்தில் செயற்படும் முன் பள்ளிகளின் செயற்பாடுகள், பாடசாலை சார்ந்த ஏனைய விடயங்களினை அறியும் பொருட்டு கலந்துரையாடலானது 2013.08.05 ம் திகதி அன்று காலை 10.30 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 13 முன்பள்ளியைச் சேர்ந்த 22 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

*கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானம்*

1. எதிர் வரும் மாதம் கலந்துரையாடலின் போது டிஸ்னி வேல்ட் பாலர் பாடசாலை ஆசிரியர்களினால் நேரமுகாமைத்துவம் தொடர்பான பயிற்சி ஏனைய ஆசிரியர்களுக்கு நடாத்துவதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



“We all will Create a Better World”

SOND

# நிதியின்றிய செயற்திட்டம்

அரச சார்பற்ற நிறுவன மென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்ட இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 11 ஆண், 24 பெண் உள்ளடங்கலாக 35 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

## கலந்துரையாடல்கள்.

காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் 48 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.



## *சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.*

1. எமது அலுவலகத்தில் காணப்படும் இரு பக்கங்கள் பாவித்த தாள்களைக் கொண்டு காந்தி சிறுவர்கழக உறுப்பினர்களினால் 105 சிறுபைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
2. சிறுவர்கழகத்தின் சிறுவர்களினால் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் நூலகசேவை நடை பெற்றது இதில் 481 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

## *SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.*

சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 09 பெண்,06 ஆண் உள்ளடங்க 15 சிறுவர்கள் 17 தடவைகள் கணனியைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

SOND

## வளநிலைய பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 13 தலைப்பில் 493 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.